# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 5213/F/2024**

திரு.A.கருணாகரன் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்/
துணை பதிவாளர்,
துணை பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம்,
செங்கல்பட்டு-603001. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.A.கருணாகரன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.பா.அருண்மொழிதமிழ், கூட்டுறவு சார்பதிவாளர் / பணியாளர் அலுவலர், செங்கல்பட்டு மண்டலம் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களுக்கு தமிழக அரசால் கடைசியாக வழங்கப்பட்ட நிதி எவ்வளவு அதில் மாவட்ட வாரியாக எவ்வளவு நிதி தொகை பிரித்து வழங்கப்பட்டுள்ளது என்பதை தனித்தனியாக விவரப்பட்டியல் வழங்கவும் என்பன போன்ற தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர், நிதித்துறை, தலைமைச் செயலகம் அவர்கள் 20.12.2023 நாளிட்ட கடிதம் மூலம் சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் மனுவினை வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சிததுறை, தலைமைச் செயலகத்திற்கு மாற்றம் செய்துள்ளார். அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, தலைமைச் செயலகம் அவர்கள் சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் 02.01.2024 நாளிட்ட கடிதம் மூலம் பொதுத்தகவல் அலுவலர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம், ரித்தர்டன்சாலை, வேப்பேரி, சென்னை அவர்களுக்கு மாற்றம் செய்துள்ளார். அதனைப் பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 16.02.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 02.02.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 13.02.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 19.04.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 22.03.2024 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு சரியான தெளிவான தகவல் கிடைக்கவில்லை என்றும் தகவலை பெற்றுத்தருமாறும் கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட ஆவணங்கள் ஏற்புடையது அல்ல என்று கருதி இவ்வாணையம் கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

**"மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கோரியுள்ள தகவல்களை பொதுத்தகவல் அலுவலர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம், ரித்தர்டன்சாலை, வேப்பேரி, சென்னை அவர்கள் உரிய பொது அதிகார அமைப்பிடம் இருந்து பெற்று மனுதாரருக்கு சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவில் கோரியுள்ள தகவல்களை உரிய தெளிவான விளக்கங்களுடன் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகல் ஆகியவற்றை இணைத்து அறிக்கையாக தயார் செய்து தற்போதைய**

**பொதுதகவல் அலுவலர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம், ரித்தர்டன்சாலை, வேப்பேரி, சென்னை 18.06.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது".**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 5213/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

**பொதுதகவல் அலுவலர்,**
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்
(வீட்டுவசதி) அலுவலகம்,
ரித்தர்டன்சாலை,
வேப்பேரி, சென்னை-7.

**<u>நகல்</u>**

பொதுதகவல் அலுவலர்/
துணை பதிவாளர்,
துணை பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம்,
செங்கல்பட்டு-603001.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.A.கருணாகரன்,
எண்.13, 14 நாடார் சங்க தெரு,
ரங்கநாதன் நகர்,
கடம்பத்தூர்,
திருவள்ளூர்-631203.

Copy to file: KR/PA